NILIS

# நூலகவியல் உயர்தரச் சான்றிதழ்க் கற்கை

# (Course Code: ACL)

ACL 2022/2023

## 1. அறிமுகம்

இலங்கைத் தகமைத் தராதரக் கட்டமைப்பு, மட்டம் 02 (SLQF, Level 02) இற்கு அமைவாக நூலகவியலில் இவ்வுயர்தரச் சான்றிதழ்க் கற்கை (ACL) வழங்கப் படுவதோடு கற்கையில் பங்குபற்றுபவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு என்பவற்றை நூலகவியலில் அபிவிருத்தி செய்வதை வசதி செய்து கொடுப்பதும் நோக்கமாகும். அதே வேளை, கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்கள் எதாகிலும் டிப்ளோமா படிப்பினை மேற்கொள்ளவும் தகுதி ஏற்படுத்துகின்றது.

## 2. கற்கை நெறியின் இலக்குக்குப் பொருத்தமானவர்கள்

இந்தத் துறையில் எந்தவொரு முன் அறிவும் இல்லாதவர்கள் அல்லது மிகக் குறைந்த துறை அறிவினைக் கொண்டவர்கள்/ அல்லது கல்விசார்/தொழின்வாண்மைச் சூழ்நிலையில் இத்துறை தொடர்பான முறையான பயிற்சி எதுவும் பெறாதவர்கள்.

## 3. நுழைவுத் தகமைகள்

கற்கை நெறியில் நுழைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த தகமை பின்வருமாறு:

- க. பொ. த. (சா/த) (பழைய பாடத்திட்டம்): **கணிதம் மற்றும் போதனா மொழியில் (சிங்களம்/ தமிழ்) திறமைச் சித்தி [credits(C)] அல்லது அதனை விட உயர்ந்த சித்திகளுடன் வேறு யாதயினும் மூன்று முக்கிய பாடங்காளுடன் மொத்தம் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.**
- க.பொ.த. (சா/த) (புதிய பாடத்திட்டம் 2007 இல் அறிமுகப் படுத்தியது): **சிறப்புச் சித்தி அல்லது அதனை விட உயர் சித்தி பெற்று கணிதம் மற்றும் தாய் மொழி உள்ளடங்கலாக வேறு ஏதாவது மூன்று பாடங்களைச் சேர்த்து 06 பாடங்களில் சித்தி.**
- மேலே உள்ள பெறுபேறுகள் இரு அமர்வுகளில் பெற்றவையாகவும் இருக்கலாம்.
- இரு அமர்வுகளில் பெறப்பட்டதாயின், முதலாவது பெறுபேற்றுச் சான்றிதழ் போதனா மொழி மற்றும் கணிதம் உள்ளிட்ட முக்கிய 05 பாடங்களில் சித்தியுடன் கணிதம் மர்றும் போதனா மொழி உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தி

## 4. எதிர்பார்க்கப் படும் கற்றல் விளைவுகள்

இக் கற்கைநெறியை பூர்த்தி செய்த பங்குபற்றுனர் பின்வரும் நன்மைகளைப் பெற்றிருப்பீர்கள்:

- வெவ்வேறு தேவைகளையும் நோக்கங்களையும் கொண்ட நபர்களுக்கு எவ்வாறு நூலகங்கள் சேவையாற்றுகின்றன என காட்டல்
- அன்றாட நூலக நடபடிகளைக் கையாளல்
- முக்கிய அதிகாரப் பூர்வத் தகவல் மூலங்களை அடையாளங் காணல்
- அடிப்படை தொடர்பாடல்களுக்கும் தகவல் மீட்டெடுப்புக்கும் ICT ஐயும் ஆங்கிலத்தையும் பயன்படுத்தல்
- பொது வாசிப்பினை ஆதரித்தலும் ஊக்கப்படுத்தலும்
- நூலக விரிவாக்கற் சேவை நடவடிக்கைகளை திட்டமிட்டு அமுல்படுத்தல்




5. **கற்கை நெறியின் முக்கியத்துவம்:** அருகில் உள்ள படத்தில் காட்டப் பட்டவாறு ACL ஐ பூர்த்தி செய்யும் GCE/AL இல்லாதவர்கள் NILIS இனால் நடாத்தப் படும் டிப்ளோமா ஒன்றினுள் (SLQF Level 3) நுழைந்து SLQF Level 4 க்குச் சமனான உயர்தர டிப்ளோமாவினைத் தொடர இயலும்.

6. **கற்கை உள்ளடக்கம்**
 I. தொழின்வாண்மைக் கற்கைகளுக்குத் தயார் படுத்தல் (ICT and English)
 II. நூலகவியலுக்கு ஓர் அறிமுகம்
 III. நூலகத்தின் அன்றாடக் கடமைகள் – 1
 IV. நூலகத்தின் அன்றாடக் கடமைகள் – 2
 V. தெரிவு அலகுகள் – பாடசாலை அல்லது பொது நூலகங்கள்
 VI. செயற் திட்டம்

7. **கால அளவு:** ஆறு மாதங்கள்

8. **போதனா மொழி:** சிங்கள அல்லது தமிழ் (கற்கை நெறிகள் எம் மொழியிலாயினும் அக்குறித்த மொழி மூலத்தில் போதுமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விண்ணப்பித்தால் மட்டுமே கற்கை நிகழ்ச்சி நடாத்தப் படும்).

9. **கற்றல் முறை/விதம்:** மறு அறிவித்தல் வரை சகல வகுப்புகளும் online இல் நடத்தப்படும்.

10. **மதிப்பீட்டு முறை:** வகுப்பறை ஒப்படைகள் மற்றும் ஒரு சிறு செயற் திட்ட அறிக்கை.

11. **மதிப்பீட்டு அளவுகோல்:** ஒவ்வொரு பாட அலகுக்கும் ஒரு ஒப்படை ஒன்றும் குறித்த தலைப்பில் ஒரு எழுத்து மூல அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். ஒவ்வொரு ஒப்படையிலும் எழுத்து அறிக்கைக்கும் குறைந்தது 50% அல்லது அதற்கு அதிகமான பெறுபேறு பெறல் வேண்டும்.

12. **கற்கை நெறிக் கட்டணங்கள்: ரூ.16,000/=** ஒரே தவணையில் செலுத்தப் படல் வேண்டும்.

13. **விண்ணப்ப முடிவுத் திகதி:** 07 ஜூலை 2022

14. **கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி:** ஆகஸ்ட் 2022

15. **விண்ணப்பிக்கும் நடைமுறை:**
 1. விண்ணப்பப் படிவத்தை எமது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கவும் https://nilis.cmb.ac.lk/home/news/2022/new_2022/2208/
 2. தெளிவாகப் படிவத்தை நிரப்பவும்
 3. ரூ. 250 இனை விண்ணப்ப நடைமுறைக்காக **மக்கள் வங்கி, திம்பிரிகஸ்யாய கிளையில்** கணக்கு இலக்கம் **086100101191736** இற்கு வைப்புச் செய்யவும். விண்ணப்பப் படிவத்தின் தரப்பட்ட கூட்டினுள் அசல் ரசீதை ஒட்டவும்.
 4. பிறப்புச் சான்றிதழ், GCE/OL சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை (NIC) என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.
 5. கடித உறையின் இடது மேல் மூளையில் கற்கை நெறி குறியீட்டை எழுதவும்.
 6. விண்ணப்பத்தையும் ஏனைய இணைப்புகளையும் பினவரும் முகவரிக்கும் அனுப்பவும்

Senior Assistant Registrar
National Institute of Library & Information Science (NILIS)
University of Colombo, Colombo - 07